பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

17 08 2024 **SATURDAY** 6 45 **AM**

வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பத்தாண்டுகளுக்கு முன்பு ஐந்து நகரங்களில் மட்டுமே இருந்த மெட்ரோ ரயில் சேவை தற்போது 21 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைக்கிறார்
- மருந்துகள் குறைந்த விலையில் மக்களுக்கு கிடைக்கச் செய்யும் நோக்கத்திலேயே முதல்வர் மருந்தகங்கள் தொடங்கப்படவுள்ளதாக மாநில சட்ட அமைச்சர் திரு. எஸ். ரகுபதி கூறியுள்ளார்.
- காவிரி டெல்டா மாவட்டங்களில் 4 ஆயிரத்து 961 கிலோமீட்டர் நீளத்திற்கு வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டுள்ளதாக மாநில வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.
- திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

பத்தாண்டுகளுக்கு முன்பு ஐந்து நகரங்களில் மட்டுமே இருந்த மெட்ரோ ரயில் சேவை தற்போது 21 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டில் மூன்று புதிய மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ள்ளதாக கூறினார்.

பெங்களூருவில் 15 ஆயிரத்து 611 கோடி ரூபாய் மதிப்பில் மூன்றாவது கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கும், தானே-யில் 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான ஒருங்கிணைந்த மெட்ரோ ரயில் திட்டத்திற்கும், புனேயில் முதலாவது மெட்ரோ ரயில் திட்டத்தின் விரிவாக்கத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் மெட்ரோ ரயில் திட்டப் பாதை அதிகமாக உள்ள நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

மத்தியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் புதிய அரசு அமைந்த பின்னர், இதுவரை 1 லட்சத்து 54 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கட்டமைப்பு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும், நேற்றைய ஒப்புதலையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைக்கிறார்

திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை மாவட்ட விவசாயிகளின் கனவுத் திட்டமான இது, 2019ஆம் ஆண்டு அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் அப்போதைய முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமியால் அடிக்கல் நாட்டப்பட்டது.

இத்திட்டம் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 3 மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்து 45 குளம் மற்றும் குட்டைகளுக்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

காலிங்கராயன் அணைக்கட்டுக்கு கீழே, பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும் இத்திட்டத்தின் மூலம், கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் 24 ஆயிரத்து 468 ஏக்கர் நிலம் பயன்பெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - மூர்த்தி 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாநில அரசு தொடங்கவுள்ள முதல்வர் மருந்தகங்களுக்கு தேவையான தரமான மருந்துகள், தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக உரிய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி கொள்முதல் செய்யப்படும் என்று மாநில சட்ட அமைச்சர் திரு. எஸ். ரகுபதி கூறியுள்ளார்.

நாகபட்டினத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுப் பெயர்வகை மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் மக்களுக்கு கிடைக்கச் செய்யும் நோக்கத்தில் இந்த திட்டத்தை அரசு தொடங்கவுள்ளதாக கூறினார்.

இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த மருந்தாளுநர்களுக்கும் கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேவையான கடனுதவியும், 3 லட்சம் ரூபாய் மானிய உதவியும் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மருந்தியல் படிப்பில் டிப்ளமோ மற்றும் பட்டப்படிப்பு முடித்தவர்கள் சுயமாக தொழில் தொடங்க இத்திட்டம் வாய்ப்பளிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

காவிரி டெல்டா மாவட்டங்களில் கடந்த மூன்றாண்டுகளில் 20 கோடி ரூபாய் செலவில் 4 ஆயிரத்து 961 கிலோமீட்டர் நீளத்திற்கு வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டுள்ளதாக வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று வேளாண்மை பொறியியல் துறையின் திட்டங்கள் குறித்து உயரதிகாரிகளுடன் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், நீர் ஆதாரங்களை மேம்படுத்திடவும், கிராமங்களில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம், இதுவரை ஆயிரத்து 924 பண்ணைக்குட்டைகள் 100 சதவீத மானியத்தில் அமைத்துத்தரப்பட்டுள்ளது என்று கூறினார்.

கடந்த ஆண்டு பெய்த பெருமழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் வேளாண்மை பொறியியல் துறையின் இயந்திரங்களை பயன்படுத்தி 3 ஆயிரத்து 330 ஏக்கர் பரப்பில் சுமார் இரண்டாயிரத்து 200 விவசாயிகள் பயனடையும் வகையில் மணல் திட்டுக்களை அகற்றும் பணி நடைபெற்று வருவதாகவும் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் 'புதுமைப்பெண்' திட்டத்தால் கல்லூரிகளில் மாணவிகளின் சேர்க்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளதாக மாநில இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால், நான் முதல்வன் திட்டத்திற்கு நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், காலை சிற்றுண்டி திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம் உள்ளிட்டவை தொடக்கக் கல்வி தொடங்கி, உயர்கல்வி வரை மாணவர்களுக்கு பயனுள்ளதாக உள்ளது என்று கூறினார்.

ஒட்டுமொத்தமாக உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது என்றும், நாடுமுழுவதும் உயர்கல்வியில் சேர்க்கை விகிதத்தை 50 சதவீதமாக உயர்த்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளபோது, தமிழ்நாடு 100 சதவீதத்தை எட்டுவதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

சமீபத்தில் மத்திய அரசு வெளியிட்ட உயர்கல்வி நிறுவனங்களின் தேசிய தரவரிசைப் பட்டியலில், தமிழகத்தைச் சேர்ந்த அண்ணா பல்கலைக் கழகம் உட்பட பல்வேறு கல்வி நிறுவனங்கள் முதன்மையான இடத்தை பெற்றுள்ளதையும் அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் கடந்த ஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டு சுற்றுலா தலங்களுக்கு கூடுதலாக 14 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

ராணிப்பேட்டையில் இயங்கி வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான தமிழ்நாடு ஹோட்டலில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த காலங்களில் நஷ்டத்தில் இயங்கி வந்த சுற்றுலாத்துறையின் ஹோட்டல்கள் தற்போது மேம்படுத்தப்பட்டு, லாபத்தில் இயங்கி வருவதாக தெரிவித்தார்.

தமிழகத்தில் சுற்றுலாத்துறையில் 100 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்கள் பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

>>>>><<<<<

கூட்டுறவு கடன் சங்கங்கள், வங்கிகளுக்கு இணையாக தரம் உயர்த்தப்படும் என்று மாநில கூட்டுறவுத்துறை செயலர் திரு. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் நேற்று நடைபெற்ற கடன் வழங்கும் விழாவில், 226 பயனாளிகளுக்கு 1 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர் பேசினார்.

கூட்டுறவு கடன் சங்கங்களில் பொதுமக்களுக்கு விரைவான சேவை கிடைக்க இணையதள இணைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும் என்றும் அவர் கூறினார்.

மாநிலத்திலேயே திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு அதிக அளவில் கடனுதவிகளை வழங்கியுள்ளதாகவும் திரு. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

கத்தார் தலைநகர் தோஹாவில் நேற்று நடைபெற்ற காஸா போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுக்கள் எந்தவித முடிவும் எட்டப்படாமல் நிறைவடைந்தது.

>>>>><<<<<

ஆப்பிரிக்க நாடான சூடானில் ஒரு கிராமத்தில் துணை ராணுவ ஆதரவுப் படை நடத்திய தாக்குதலில் 80 பேர் கொல்லப்பட்டனர்.

>>>>><<<<<

மத்திய அரசின் பாதுகாப்புத்துறை உட்பட முக்கிய துறைகளில் உள்ள செயலர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

நாமக்கல்லில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நேரடி மாணவர் சேர்க்கை இம்மாதம் 31ஆம் தேதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் நேற்று அரசு பேருந்து மீது உயர் மின்அழுத்த கம்பி உராசியதில் உயிரிழந்த ஓட்டுநரின் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 3 லட்சம் ரூபாய் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் திரு லஷ்மிபதி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

குற்றாலத்தில் நடைபெறும் சாரல் திருவிழாவின் இரண்டாவது நாளான இன்று ஐந்தருவிக்கு செல்லும் சாலையில் உள்ள வெண்ணமடைக்குளத்தில் படகுப் போட்டி நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை, நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒருசில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<